STC.No. 16/2025
நாள் 08.01.2026.
P.W.2 – (அபிமன்னன் கருப்பசாமி )
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

புகார்தாரரின் தகப்பனார் எனக்கு நண்பர் என்றால் சரி. புகார்தாரரின் தகப்பனார் பெயர் திருப்பதி என்றால் சரி. திருப்பதி அரசு ஊழியர் என்றால் சரி. எனக்கும் புகார்தாரரின் தகப்பனாருக்கும் 45 ஆண்டுகளாக பழக்கம். நான் புகார்தாரரின் தகப்பனாருடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்வது வாடிக்கை என்றால் சரி. நான் புகார்தாரரின் தகப்பனாரின் நலன்விரும்பி என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை எனக்கு தெரியும். எதிரியும் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார். நான் எதிரியுடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்துள்ளேனா என்றால் இல்லை, அவர் பெயரில் உள்ள நிலத்தை எனக்கு கிரயம் கொடுத்துள்ளார். நானும் எதிரியும் கூட்டாக ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை. நான் எதிரி மூலமாக இடங்கள் வாங்கி விற்பனை செய்துள்ளேன் என்றால் சரி. காளிராஜன் என்பவர் சொத்தை தவறுதலாக வாங்கியதாக நில அபகரிப்பு பிரிவில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த விசாரணையில் நான் வாக்குமூலம் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை.

மாரியம்மாள் என்பவர் புகார்தாரரின் தாயார் என்றால் சரி. மாரியம்மாள் பெயரில் இடங்கள் வாங்கி விற்பனை செய்தேன் என்றால் சரி. மாரியம்மாள் பெயரில் இடம் வாங்கியது எதிரி மூலமாகதான் வாங்கினேன் என்றால் சரி. பொதுவாக கடன் கொடுப்பவர்கள் அடமான பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டுதான் கடன் கொடுப்பார்கள் என்றால் சரி. நான் என் முதல் விசாரணையில் புகார்தாரரின் அப்பாவிடம் ரூ.20 லட்சம் கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். என் நிருபண வாக்குமூலம் பத்தி 2–ல் "என்னிடம் ரூ.20,00,000/–(ரூபாய் இருபது லட்சம் மட்டும்) கடன் பெற்று வைத்திருந்த பணத்தை" என சொல்லியுள்ளேன் என்றால் புகார்தாரரும் அவர் தகப்பனாரும் இருந்த சமயம் தான் நான் பணம் கொடுத்தேன். நான் அவ்வாறு பணம் கொடுத்ததற்கு ஆவணம் ஏதும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நான் அவருக்கு கொடுக்க வேண்டிய பணத்தைதான் கொடுத்தேன். என் நிருபண வாக்குமூலத்தில் நான் புகார்தாரரின் தகப்பனாருக்கு ஏற்கனவே கொடுக்கவேண்டிய பணத்தைதான் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரி.

நான் பணத்தை எந்த தேதியில் கொடுத்தேன் என்றும் என் நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரி. எதிரி புகார்தாரர் மற்றும் புகார்தாரரின் தகப்பனார் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் எனக்கு

தெரியும். அந்த புகாரின் பெயரில் திருத்தங்கல் காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த விசாரணையில் புகார்தாரரின் தகப்பனாரும் நானும் ஆஜரானோம் என்றால் சரி. அந்த விசாரணையில் இந்த வழக்கின் புகார்தாரர் தினேஷ்குமார் ஆஜராகவில்லை என்றால் சரி. அந்த புகார் மனுவில் ஏற்கனவே மாரியம்மாளிடம் இடம் வாங்கியது தொடர்பாக எதிரி காசோலை கொடுத்திருந்ததாக தெரிவித்திருந்தார் என்றால் நான் அந்த புகாரை படிக்கவில்லை. அந்த புகார் சம்மந்தமாக என்னிடம் விசாரிக்கவில்லை. எனக்கு எதிரி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் விபரம் நேரடியாக தெரியும் என்றாலும் அந்த புகாரில் 2021ம் ஆண்டு இடம் வாங்கியது தொடர்பாக கொடுத்த வெற்று காசோலையை வைத்துக் கொண்டு கந்து வட்டி கேட்டு மிரட்டுவதாக எதிரி தெரிவித்திருந்தார் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் புகார்தாரரின் பெற்றோருக்கும் வியாபார தொடர்பு இருந்தது என்றால் சரி. புகார்தாரர் தகப்பனார் அரசு ஊழியர் என்பதால் அவர் பெயரில் வியாபாரம் செய்ய முடியாது என்பதால் குழந்தைகள் மற்றும் மனைவி பெயரில் இடங்கள் வாங்கி விற்க செய்தார். புகார்தாரருக்கும் எதிரிக்கும் நேரடி தொடர்பு இல்லை என்றால் சரி. புகார்தாரர் பெயருக்கு புகார்தாரர் தகப்பனார் மூலமாக எதிரி 5 ஏக்கர் நிலங்கள் வாங்கி கொடுத்துள்ளார்.

எதிரி புகார்தாரரிடம் கடன் வாங்கியதாக சொல்வதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரி. என்னிடம் அலைபேசியில் திருப்பதி மற்றும் புகார்தாரர் தெரிவித்தார்கள். நாராயணசாமி என்ற நிலத்தரகர் என்னுடம் வியாபாரம் செய்கிறார் என்றால் சரி. நான் திருப்பதி வாத்தியார் எதிரி, மாரியம்மாள் ஆகியோர் வியாபாரம் பார்த்தது நாராயணசாமி என்பவருக்கும் தெரியும் என்றால் சரி. புகார்தாரர் ரூ.50 லட்சம் அடமானம் வாங்கியதாக சொல்வதும் புகார்தாரரின் தகப்பனார் ரூ.25 லட்சம் வங்கியில் கடன் வாங்கியதாக சொல்வதும் எனக்கு திருப்பதி வாத்தியார் சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல. ரூ.50 லட்சம் கடனை புகார்தாரரின் தாயார் சொத்தை நம்பிக்கை கிரயமாக எழுதிக் கொடுத்து இராஜபாளையத்தை சேர்ந்த பிரதீப் என்பவரிடம் இருந்து கடன் பெற நான்தான் ஏற்பாடு செய்தேன். தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி மதுரை கிளையிலும் என்னுடைய நண்பர் மூலமாக திருப்பதிக்கு நான்தான் கடன் வாங்கி கொடுத்தேன். என் நிருபண வாக்குமூலத்தில் எந்த தேதியில் கடன் வாங்கிக் கொடுத்தேன் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நான் சொல்லும் நம்பிக்கை கிரய ஆவணம் மற்றும் மெர்க்கண்டைல் வங்கி கடன் ஆவணங்களை பார்த்தால் நான் சொன்ன விபரம் உண்மையா என தெரியவரும் என்றால் சரி. குன்னூரில் கோவில் நகர் என ஒரு மனைகளை ஏற்படுத்தி விற்பனை செய்தார்கள் என்றால் சரி. அந்த நில விற்பனை செய்தது சம்மந்தமாக எதிரிக்கும் திருப்பதி வாத்தியாருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்றால் சரி. அவ்வாறு நடைபெற்றது 2021 மற்றும் 2022 ஆண்டுகள் இருக்கும். அந்த கருத்து வேறுபாடு காரணமாக மாரியம்மாள் மற்றும் சுலோச்சனா விருதுநகர் மாவட்ட குற்றபிரிவில் புகார் கொடுத்திருந்தார்கள். அதுவும்

2021,2022 காலகட்டத்தில்தான். அந்த பிரச்சனை பேசி முடிக்கப்படவில்லை. அந்த போலீஸ் விசாரணைக்கு நான் நாராயணசாமி சென்றிருந்தோம். தங்கமும் விசாரணைக்கு ஆஜரானார். புகார்தாரருக்கு சம்பளம் எவ்வளவு என தெரியுமா என்றால் அவருக்கு மாத சம்பளம் ரூ.15,000/– வரும். புகார்தாரரின் அண்ணன் மாரிச்சாமி திருமணம் முடிந்து தனியாக வசிக்கிறார் என்றால் சரியல்ல. கூட்டுக் குடும்பமாக வசிக்கிறார்கள். மாரிச்சாமிக்கு மாத சம்பளம் ரூ.40,000/– வரும்.

புகார்தாரரின் பெற்றோர் எதிரி தங்கம் என்பவருடன் வியாபாரம் செய்வது அவர்களின் பிள்ளைகளுக்கு பிடிக்கவில்லை என்றால் சரி. ரூ.1,05,00,000/– பெரிய தொகை என்றால் சரி. ரூ.20,000/–ற்கு மேல் பரிவர்த்தனை வங்கி மூலமாகதான் செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியும். நான் சொல்வதுபோல் எதிரி புகார்தாரரிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றாலும் வழக்கு காசோலை எதிரியால் புகார்தாரருக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரரின் தகப்பனார் எனக்கு நல்ல நண்பர் என்பதால் நான் புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.